# அரண்

ARAN International e-Journal of Tamil Research

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :27 July 2025*

கோட்டை:7 வாயில்:27 ஜூலை 2025

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


குறுந்தொகைப் பாடல்களில் உளவியல் பகுப்பாய்வு அணுகுமுறை
முனைவர் இரா.ஜெய்சங்கர்

புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் ஆளுமைத்திறன்
முனைவர் அ.சேமலா வசந்தா

ஐங்குறுநூற்றில் பாணர்
தே. சுதா

தொல்காப்பியம் காட்டும் நிறக்கோட்பாடுகள்
க.சுவாதி

சங்க இலக்கியங்கள் சுட்டும் களவு கோட்பாடுகள்
ஏ. தீபா

சிலம்பில் இயற்கை
க. மங்கையர்க்கரசி

மணிமேகலையில் மனிதநேயம்
பெ. ஜோதி,

இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பு
முனைவர் ஏ.சித்ரா

பண்டைய தமிழர்களின் மணமுறைச் சடங்குகள்
முனைவர் கி.சரண்யா

ஆற்றுப்படைகலைஞர்களின் அறம்
கு. சிந்து

பண்டைகாலத்து தமிழக மக்களின் வாழ்க்கைமுறை
ம. துர்க்காதேவி

ஒரு சொல் பல பொருள் - வேர்ச்சொல் வழி விளக்கம் அறிதல்
முனைவர் ஆ. செந்தமிழ்க்கோதை

வள்ளுவர் கூறும் வாழ்வியல் அறம்
முனைவர். நா. ஹேமமாலதி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**தமிழர் நிலத்தில் பாலையும் ஒட்டகமும்**
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

**தமிழ் மொழியில் வெளிப்படும் கணிதவியல் கூறுகள்**
முனைவர்.அ.ரேவதி

**தமிழர் மரபும் வாழ்வியலும்**
பொ. அகத்திய பாலா

**தமிழ்ச் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்கள்**
முனைவர் வ.மோகனப்பிரியா

**பெரியபுராணத்திற்கு அணிசெய்யும் சிலேடையணி**
வே.வெ.சுஜாதா

**கூற்றுகளில் மெய்ப்பாடு புலப்படும் விதம்**
மேபல் சுபிதா த.

**பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் அவர்தம் நாட்டியக் கலைப்பணியும்**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**உலாப்பிரபந்தங்களில் நாட்டியசாஸ்திரம் கூறும் அஷ்டவித நாயகிகளின் வகிபங்கு**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**நாட்டுப்புற வழக்காறுகள் நோக்கில் கானகன் நாவல்**
ர.விண்ணிலவு1, முனைவர் அ. மரிய செபஸ்தியான்2

**சங்கக் கால திணை பதிவுகளின் இடையர் இன மக்களின் சமூக வாழ்க்கையும் கீதாரி நாவலில் இடையர் வாழ்வியல்**
ஓர் ஒப்பாய்வு- சே.நிர்மலா1, முனைவர் அ.மரிய செபஸ்தியான்2

**வேள்பாரி புதினத்துள் அகநானூற்று காட்சிகள்**
ர.கிருஷ்ணவேணி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


சைகோன் - புதுச்சேரி புதினம் முன்னிறுத்தும் காலனிய ஆணாதிக்கமும், பின்காலனியப் பெண்ணியமும்
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

கவிஞர் எழிலவனின் 'மரவாடியில் ஒரு போதிமரத்தில்' படைப்பாக்க உத்திகள்
சி.ஆர்த்தி

தேனி சீருடையான் புதினங்களில் வெளிப்படும் பெண்களின் நிலை
பி.தீபாவதி

கீரனூர் ஜாகிர் ராஜா புதினங்களில் இஸ்லாமியர் பண்பாடு
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

உரிப்பொருள் உணர்த்தும் கவிஞர் சுகிர்தராணி கவிதைகள்
ந.ஸ்டாலின்

தமிழ்த் திரை இசைப் பாடல்கள்
கார்த்திக் க

நிர்வாணமுக்தி சிறுகதை - பெண்மைய விமர்சனம்
ஜென்சி வை கி

இன்றைய நாளிதழ்களில் தலையங்கங்கள்
சே. வனிதா

Historical And Archaeological Impact Of Palayarai
Dr.S.Neelavathy

Chola's Temples As A Social Organization
A Study - S. Mala

A Statue Of Prakara At The Kumbakonam Nageswara Temple
M. Amirthavalli



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# தமிழ்



# தமிழ்ச் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்கள்

# *FOLK DEITIES IN TAMIL SOCIET)*

***Dr.V.MOHANAPRIYA,*** *Assisttant Professor, Department Of Tamil, Kpr College Of Arts Science And Research- Arasur , Orcid No :0009-0003-0237-7733*

***Abstrct;***

*This research article, Folk Deities in Tamil Society, aims to examine what folklore is, its basic elements, the formation and origin of folk deities, the classifications of folk deities, methods of worship, the impact that folk deities may have had on Tamil society, and the role of folk deities in the present-day context.*

***Keywords:*** *Tamil, Folk Songs, Gods, Tamil, Religion*

**முனைவர் வ.மோகனப்பிரியா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,கே.பி.ஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக்கல்லூரி, அரசூர்

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்கள் என்னும் இவ்வாய்வுக் கட்டுரையானது, நாட்டுப்புறவியல் என்றால் என்ன? அவற்றின் அடிப்படை கூறுகள் எவை என்பதையும், நாட்டுப்புறத் தெய்வங்களின் உருவாக்கத் தோற்றம், நாட்டுப்புறத் தெய்வங்களின் வகைப்பாடுகள், வழிபாட்டு முறைகள், தமிழ் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்கள் ஏற்படுத்தியிருக்கக்கூடிய தாக்கம் மற்றும் இன்றைய சூழலில் நாட்டுப்புற தெய்வங்களின் பங்கு போன்றவற்றை ஆராய்வதாக அமையப் பெறுகின்றது.

**திறவுச்சொற்கள்: தமிழ், நாட்டுப்புறப்பாடல்கள், தெய்வங்கள், தமிழ், சமயம்**

**முன்னுரை**

மனித இன வரலாற்றில் மொழியின் தோற்றம் பற்றி அறிதியிட்டுக் கூற முடியாதது போல, மக்கள் இலக்கியமான நாட்டுப்புற இலக்கியத்தின் தோற்றம் பற்றிய காலவரையறையையும் அறிதியிட முடியாது. மொழி உருவான போதே மனிதனின் சிந்தனையாக்கமும் உருப்பெற்றிருக்க வேண்டும். அந்த சிந்தனைத்திறனின் முதல் இலக்கிய வகைமையாக வாய்மொழி இலக்கியங்களே இருந்திருக்கக் கூடும். அதனைத் தொடர்ந்தே எழுதப்பட்ட இலக்கியங்கள் உருவாகியிருக்க வேண்டும். மக்களின் பழக்கவழக்கங்களையும்,

பண்பாடுகளையும் நம்பிக்கைகளையும் இலக்கியங்களையும் ஆராயும் இயலே நாட்டுப்புறவியல் ஆகும். இந்த நாட்டுப்புறவியலின் மிக முக்கிய கூறுகளுள் ஒன்று தெய்வங்களும், தெய்வம் சார்ந்த நம்பிக்கைகளும், வழிபாடுகளும், சடங்குகளும் ஆகும்.

**நாட்டுப்புறவியல்**

"Folklore" என்ற சொல் *1846* இல் வில்லியம் ஜான் தாமஸ் அவர்களால் உருவாக்கப்பட்டது. இந்த "Folklore" என்பது நாட்டுப்புறவியலைக் குறிக்கும். **"நாட்டுப்புறவியலை நாட்டுப்புற இலக்கியம், நாட்டுப்புறக் கலை என்ற பிரிவினுள் அடக்குகின்றனர்"1** ஆனால் நாட்டுப்புறவியல் இவற்றுடன் நின்றுவிடாமல், நாட்டுப்புற நம்பிக்கை, பாடல், தெய்வம், சடங்குகள், மருத்துவம், கதை, கதைப்பாடல், பழமொழி, விடுகதை, கட்டிடக்கலை, உணவு, உடை என்று பலதரப்பட்ட மக்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்து அனைத்தையும் தன்னுள் அடக்கி ஆராயப்படும் துறையாக விளங்கி வருகிறது. இத்தகைய நாட்டுப்புற இலக்கியத்திற்கு

**"ஐந்து முக்கிய பண்புகள் இருப்பதாக ஜான் ஹெரால்டு பிருண்வார்ட் கூறுகின்றார். அவையாவன,**

- ❖ **வாய்மொழியாகப் பரவல்**
- ❖ **மரபு வழிபட்டது**
- ❖ **பல்வேறு வடிவங்களாகத் திரிபடைதல்**
- ❖ **ஆசிரியர் இல்லாமை**
- ❖ **ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அடங்குவது "2** போன்றவை ஆகும்.

பொதுவாக நாட்டுப்புறவியல் என்பது நாட்டுபுற மக்களை மட்டும் குறிப்பதன்று. மரபுவழிப்பட்ட ஒரு இனம், சாதி, சமுதாயம் என அனைத்தும் இவற்றுள் அடங்கும். ஆக நாட்டுப்புறவியலானது கிராமத்தில் வாழக்கூடிய மக்களை மட்டும் குறிக்காமல் நகரத்தில் வாழும் மக்களையும் குறிப்பதால் இதனை மக்கள் வழக்காற்றியல் என்றும் உரைக்கலாம். **"நாட்டுப்புறவியல் என்பது குறிப்பிட்ட ஒரு பிரிவைச் சேர்ந்த மக்களை மட்டும் குறிப்பதன்று. வரிவடிவமல்லாது பேச்சு மொழியை மட்டுமே குறிப்பதுமன்று அது நகர்புறத்திற்குமுரியது."3** ஆக எந்த மக்களைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமோ அல்லது அறிந்து கொள்ள நினைக்கின்றோமோ அந்த மக்களைப் பற்றி ஆராய்வதாக நாட்டுப்புறவியல் அமையப்பெறுகின்றது.

**வழிபாடு**

ஐம்பொறிகளை அடக்கி மனதை ஒருநிலைப்படுத்தி இறைவனை வேண்டுதலே வழிபாடு எனப்படுகிறது. **”மனிதன் இவ்வுலகத் துன்பத்திலிருந்து விடுதலை பெற்று நல்வாழ்வு வாழ விரும்புகின்றான். அதற்கு உறுதுணையாக ஒரு ஆற்றல் வேண்டும் என விளைகின்றான். கடவுள் என்ற ஆற்றலே பிறர் தர முடியாததைத் தனக்கு அளிக்கும் என கருதி அவற்றை வழிபடுகின்றான்”.4** வெள்ளம் வருதல், நிலநடுக்கம், கடல் கொந்தளிப்பு முதலியன கடவுளின் கோபம் என்று பயந்தான். நல்லது நடந்தால் தெய்வத்தின் அருள் என்றும் தீயவை நடந்தால் தெய்வத்தின் கோபம் என்றும் மனிதன் நம்பினான். கடவுளின் சீற்றத்தைக் குறைக்கச் சிறப்பு வழிபாடுகளையும் நோன்பு விழாக்களையும் எடுத்தான்.

பகலில் சூரியனின் ஒளியும், இரவில் சந்திரனின் ஒளியும் , உயிர் வாழ மழை நீரும் துணைபுரிந்ததால் அவற்றுக்கு நன்றி செலுத்தும் நோக்கில் ஞாயிறு, திங்கள், மழை ஆகியவற்றைக் கடவுளாக எண்ணி வழிபட்டான். இதற்குச் சான்றாக சிலப்பதிகாரத்தின் பாடல் வரிகள் அமையப்பெறுவதைக் காணமுடிகிறது.

**”ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்”5**

**“ திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்”6**


**“ மாமழைப் போற்றுதும் மாமழைப் போற்றுதும் ” 7** என்பதாகும்.

இவ்வகையான இயற்கை வழிபாட்டின் வளர்ச்சியே குறியீட்டுடன் கூடிய உருவங்களை அமைத்து வழிபடத் தோன்றுவாயாக இருந்திருக்கிறது. பிறகு மனித உருவம் போல் கடவுள் உருவத்தையும் அமைத்து மனிதர்களைப் போல் கடவுளர்களையும் ஆண், பெண் தெய்வங்கள் என வகைப்படுத்தி வழிபட ஆரம்பித்தனர். வழிபாட்டில் இயற்கை வழிபாடு, ஆவி உலக வழிபாடு, குலக்குறி வழிபாடு, முன்னோர் வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு என்று வழிபாட்டு தெய்வங்களும் வழிபாட்டு முறைமைகளும் பல்வேறாக உள்ளன. உலகிலேயே பல வகையான சிறப்புடைய பண்பாடுகளையும், அவை தொடர்பான பழக்கங்களையும் மிகவும் தொன்மையாகவும் சிறப்பாகவும் உடையவர்கள் தமிழர்கள். ஒரு நாட்டின் பண்பாடு வரலாற்றோடு நெருங்கிய தொடர்புடையதாகும். பெரும்பாலும் இந்த பண்பாடானது நாட்டு மக்களின் வழிபாட்டுடன் தொடர்புடையதாக உள்ளது. எனவே நாட்டுப்புற ஆய்வாளர்கள் தமிழர் வழிபாட்டு மரபை இருபெரும் பிரிவுகளாக வகுக்கின்றனர். அவை பெரு மரபு எனப்படுகின்ற பெருந்தெய்வ வழிபாடு, சிறு மரபு

எனப்படுகின்ற சிறு தெய்வ வழிபாடு. இதில் பெரும் மரபு என்பது ஆகம விதிகளின்படி அமைக்கப்பட்ட கோவில்களையும் சிலைகளையும், வழிபாட்டு முறைமைகளையும் கொண்டதாக இருக்கும். சிறு மரபு என்பது எந்த ஒரு விதிகளுக்கும் உட்படாத சுதந்திரத்தோடு கூடிய வழிபாட்டு மரபைக் கொண்டதாக இருக்கும்.

**நாட்டார் தெய்வங்களின் தோற்றம்**

ஆதிமனிதன் இயற்கையோடு இணைந்த வாழ்வு நடத்தினான். இயற்கை சீற்றத்தினால் பாதிக்கப்பட்டதால் முதலில் இயற்கையை வழிபட ஆரம்பித்தான் விழாக்கள் எடுத்து நன்றி செலுத்தினான். **”இயற்கையின் ஒழுங்கமைவுகளும் நுட்பமும் மனிதனைச் சமய நம்பிக்கைக்கு அழைத்துச் செல்கின்றன. கதிரவனின் இயக்கமும் மதியின் இயக்கமும் பருவங்களின் மாறுதல்களும் இயற்கை நியதியின் விளைவு போன்றவை மனிதனில் ஒரு பாதிப்பை உண்டாக்கி சமய வாழ்வுக்கும் நம்பிக்கை அளிக்கின்றனர்”** 8




நாட்டார் தெய்வங்கள் என்பவை பெரும்பாலும் வாழ்ந்து மறைந்த நபர்களாகவோ, அல்லது வீரமரணம் அடைந்த நபர்களாகவோ, தமது குடும்பத்தில் இறந்த பெண் குழந்தைகளாகவோ இருக்கின்றன. ”கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்ற பழமொழி தமிழகம் முழுவதும் வழங்கப்பட்டு வருவதைக் காண முடிகிறது. நல்லது நடந்தால் தெய்வத்தின் அருள் என்றும் தீயவை நடந்தால் தெய்வத்தின் கோபம் என்றும் நம்புகின்றான். நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை நம்பிக்கையுடனும் அச்சம் உணர்வுடனும் வழிபடுகின்றனர். நாட்டுப்புற மக்களின் அச்ச உணர்வும், நம்பிக்கையுமே நாட்டுபுறத் தெய்வங்களின் தோற்றங்களுக்கு மூல காரணமாக அமைந்திருக்கிறது.

**நாட்டுப்புறத் தெய்வங்களின் உருவ அமைப்பும், அமைவிடவும்**

ஆரம்ப காலகட்டங்களில் நாட்டுப்புறத் தெய்வங்கள் எந்தவித உருவ அமைப்பும் இன்றி மண்ணாலும், கல்லாலும், வேல் வடிவிலும் பீடங்களாகவும் அமைக்கப்பட்டிருந்தன. பெரும்பாலும் திருவிழா காலகட்டங்களில் ”சக்தி கரகமே” தெய்வமாக நினைத்து வழிபடப்பட்டது. திருவிழா முடிந்ததும் இந்த சக்தி கரகங்கள் கலைக்கப்படுவதைக் காணமுடிகிறது. அதன் பின்னரான நாட்களில் , பெரிய உருவம், பிதுங்கிய கண்கள், கையில்

சூலாயுதம், வேல், சாட்டை, கதாயுதம் , அறிவாள், சிறியதும் பெரியதுமான பரிவாரத் தெய்வங்கள், வேட்டை நாய்கள் என்று பார்ப்போரை அச்சத்தில் ஆழ்த்தக்கூடிய உருவமைப்புடனும் இந்த நாட்டார் தெய்வங்கள் காட்சியளிக்க ஆரம்பித்தன. இத்தகைய நாட்டார் தெய்வங்கள் மரத்தின் அடியிலும், ஊரின் ஒதுக்குப்புறங்களிலும் வெட்ட வெளிக்காடுகளிலும், ஓடுகள் வேயப்பட்ட சிறு வீட்டின் உள்ளும் இருப்பதைக் காண முடிகிறது. கிராம கோயில்கள் பெரும்பாலும் மரங்களுடன் தொடர்புடையவையாக உள்ளன. இந்த மரங்கள் பழமையின் குறியீடாக கருதப்படுகின்றன. பெரும்பாலான நாட்டுப்புற தெய்வங்கள் நீர் நிலைக்கு அருகிலும் காணப்படுகின்றன.

**சிறுதெய்வ வழிபாடு**

சிறுதெய்வங்கள்

**வீட்டுத்தெய்வம் குலதெய்வம் இனத்தெய்வம் ஊர்த்தெய்வம் வெகுசனத் தெய்வம்**

சிறுதெய்வங்கள்

**பெண் தெய்வங்கள்** ↔ **ஆண் தெய்வங்கள்**

***1.தாய்த்தெய்வங்கள்***

***2.கன்னித்தெய்வங்கள்***

***1.முதன்மை தெய்வங்கள்***

***2.துணைமைத் தெய்வங்கள்***

நாட்டுப்புறத் தெய்வங்களையே சிறுதெய்வங்கள் என்று அழைக்கின்றோம். குடும்ப தெய்வ வழிபாடும், குல தெய்வ வழிபாடும், ஊர்தெய்வ வழிபாடும் இவற்றில் அடங்கும். குடும்பத்தில் யாரேனும் துன்புற்றாலும், நோய்வாய்ப்பட்டாலும் குடும்ப தெய்வத்தை வழிபட்டு பூஜைகள் செய்வர். குடும்ப தெய்வத்தின் பெயரைப் பிள்ளைகளுக்கு வைக்கும் வழக்கமும் அதிகளவில் நாட்டுப்புறங்களில் காணப்படுகிறது.

இவை நாட்டுப்புற மக்களின் காவல் தெய்வங்களாக, நோய் நீக்கி நலம் தருபவைகளாக, வாழ்க்கைக்கு வளம் சேர்ப்பவையாக, கருதி வணங்கப்படுகின்றன. இத்தெய்வங்கள் பரந்துபட்ட தொடர்பில்லாமல் கிராமங்களையே இருப்பிடமாகக் கொண்டவை ஆகும். இந்த தெய்வ வழிபாட்டு முறையில் பொதுவான இலக்கணங்களும் வரைமுறைகளும் ஒதுக்கப்படவில்லை. அவை காலம் காலமாக முன்னோர்களால் வழிபாடு செய்யப்படுகின்றன.

**பெருந்த தெய்வங்கள்**

நாட்டுப்புற மக்களிடையே சிறு தெய்வங்களோடு சேர்ந்த பெருந்தெய்வ வழிபாடும் காணப்படுகின்றன. சிவன், திருமால், முருகன் போன்ற பெரிய தெய்வங்களும் மக்களின் செல்வாக்கை பெற்றிருந்தனர்.

**குலதெய்வம்**

குறிப்பிட்ட மூதாதையின் மரபில் தோன்றியதன் வாயிலாக ஒருவருக்கொருவர் உறவு கொள்ளும் குழுவே குலமாகும். நாட்டுப்புறங்களில் வாழும் ஒவ்வொரு இனக்குழுவினரும் தங்களுக்குள் குலங்களைக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு குலத்திற்கும் ஒரு குலதெய்வம் உண்டு.

**"குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறவாதே" 9**

**"குலதெய்வத்தைக் கும்பிட்டு கும்மியடி "10**

போன்ற பல்வேறு பழமொழிகளும் பாடல்களும் இன்றும் நாட்டுப்புறங்களில் வழங்கப்படுவதைக் காணமுடிகிறது. சில நேரங்களில் செல்வாக்கு மிக்க குலதெய்வம் ஊர் தெய்வமாக மாறுவதையும் காணமுடிகிறது.

**காவல் தெய்வம்**

காவல் தெய்வங்கள் பெரும்பாலும் ஆண் தெய்வங்களாகவே உள்ளன. ஒரு சில இடங்களில் காளியம்மனாகிய பெண் தெய்வம் ஊரை காவல் காக்கிறது. ஊரை விட்டு வெளியூருக்குச் செல்லும்போதும், வெளியூருக்குச் சென்று ஊர் திரும்பிய பின்னரும் திருவிழா காலங்களிலும், மழை வேண்டியும், பாதுகாப்பு வேண்டியும் காவல் தெய்வங்களுக்கு வழிபாடு நடத்தப்படுகிறது. ஊரின் எல்லையில் காவல் தெய்வத்திற்கு கோவில் கட்டப்பட்டுள்ளது. இந்த காவல் தெய்வ வழிபாடானது நாட்டார் மக்களின் நம்பிக்கை அடிப்படையில், அவர்களின் முன்னோர்கள் கற்றுத் தந்த முறைப்படியும் நடக்கிறது.

**சிறு தெய்வம் மற்றும் பெருந்தெய்வத்தின் வேறுபாடு**

| **சிறு தெய்வம்** | **பெருந்தெய்வம்** |
|---|---|
| பிறப்பு இறப்பு உள்ளவை. | ஆதி அந்தம் இல்லாதவை. |
| குறிப்பிட்ட ஆற்றல் உடையவை. மனிதன் உணர்வினால் தோன்றியவை. | எல்லையற்ற ஆற்றல் உடையவை. பண்பாட்டு உணர்வில் தோன்றியவை . |
| உயிர்பலி உண்டு. பிராமணர் அல்லாதவர்கள் பெரும்பாலும் பூசாரிகளாக இருப்பார். | உயிர்பலி இல்லை. பிராமணர் பூசாரிகளாக இருப்பார். |
| நாட்டுப்புற தெய்வங்கள் பெரும்பான்மை பெண் தெய்வங்கள். பெண் தெய்வங்கள் திருமணம் ஆகாதவை. | பெரும்பான்மை ஆண் தெய்வங்கள். பெண் தெய்வங்கள் திருமணம் ஆனவையாக இருக்கும். |
| பூசை, திருவிழா போன்றவற்றில் வரையறை இல்லை. | பூசை, திருவிழா போன்றவற்றில் திட்டவட்டமான வரன்முறை உண்டு |
| பெரும்பாலும் கோயில் அமைப்பு இல்லாதவை. | ஆகம விதிப்படி கோயில் அமைப்பு உண்டு. |
| சிறு தெய்வங்கள் சைவ வைணவ வேறுபாடு இல்லை. அசைவப் பொருட்களும் படைக்கப்படுகின்றன. | சைவ , வைணவ வேறுபாடு உண்டு. |
| மக்களால் உண்டாக்கப்பட்டு மக்களால் பேணப்படுபவை. நாட்டுப்புற தெய்வங்களுக்கு செவிவழிச் செய்தி நாட்டுப்புறக் கதைகள் உண்டு. பாமர மக்கள் வழிபடக்கூடியவை அந்தந்த குறிப்பிட்ட வட்டாரத்துக்குரியவை. அருள்வாக்கு கூறக்கூடியவை. | அக்காலத்தில் மன்னர்கள், அரசியல் அதிகாரிகளால் பேணப்பட்டவை. தலபுராணங்கள் உண்டு.<br><br>எல்லா வட்டாரத்திற்கும் உரியவை. |

| | |
|---|---|
| நாட்டுப்புற தெய்வங்கள் பெரும் எண்ணிக்கை உடையவை. கொடூரமான உருவுடையவையாகவும் இருக்கும். | பாமர மக்களும் நகர்ப்புற மக்களும் வழிபடக்கூடியவை. சாந்தமான உருவுடையவையாக இருக்கும் |
| பகையை அடியோடு அழித்தல். அண்டம் முழுவதும் தொடர்பு கொள்ளாமல் கிராம வாழ்க்கையோடு தொடர்பு கொண்டவையாக உள்ளது. | சிவன் திருமால் என்ற பிரிவில் அடக்குவர். அண்டம் முழுவதும் தொடர்பு கொண்டு நாகரீக வாழ்வோடு தொடர்புடையவை. |

**தமிழ் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்களின் பங்கு**

ஆதிப் பழங்குடியான தமிழ்ச் சமூகத்தின் வேர்களாக இந்த நாட்டார் வழக்காற்றியல் திகழ்ந்து வருகிறது. தெய்வ வழிபாடு தோற்றம் பெற்ற நாள் கொண்டு , இந்த நாட்டார் தெய்வங்களுக்கான சடங்குகளும், வழிபாடுகளும் பின்பற்றப்பட்டு வருகின்றன. இன்றைய நவீன காலகட்டத்திலும் பல்வேறு மன்னர்களின் படையெடுப்பு, பிற நாட்டவர்களின் ஆட்சி மற்றும் பலத் தமிழ் பெருவேந்தர்களின் ஆளுகையின் பிற்பாடும் உலகம் வியக்கும் பல்வேறு கட்டிடக்கலை மற்றும் சிற்பக்கலையின் பெருமிதத்தில் ஒளிவிட்டுத் திகழும் பெருந்தெய்வங்களுக்கு மத்தியில் சிறு தெய்வங்களின் வழிபாடுகள் சிறப்புற்று இருப்பதற்குக் காரணம் நாட்டுப்புற மக்களும், அம்மக்களின் நம்பிக்கை உணர்வும், அச்சமுமே ஆகும். மேலும் இந்நாட்டுப்புறத் தெய்வங்கள் **"நாட்டுப்புற மக்களோடு ஒன்றி காணப்படும் சக்தியாக விளங்குவதோடல்லாமல் மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக் கொடுப்பதால் கிராமப்புறத் தெய்வங்கள் அன்றாடம் நினைத்து வழிபடப்படுகின்றன".11** தமிழ் இலக்கியங்கள் ஏட்டில் எழுதப்படாத காலம் தொட்டு, படிக்காத பாமர மக்களிடையே இலக்கியங்களையும் அவற்றின் கதைகளையும் கொண்டு சேர்த்த அரும்பணியை செய்தவை இந்த நாட்டுப்புறக் கலை வடிவங்களானக் கதைப்பாடல்களும், தெருக்கூத்துகளும், நாடகங்களும், விடுகதைகளும், பழமொழிகளும் ஆகும். தமிழ் இலக்கியங்களின் வளர்ச்சியில் ஆரம்ப காலகட்ட முதல் இன்றளவும் பெரும்பங்கு வகிப்பவையாக விளங்குபவை இந்த நாட்டார் கலைகளும் இலக்கியங்களும் ஆகும்.

**முடிவுரை**

நவீன காலகட்டங்களில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக பண்பாடு சார்ந்த பாரம்பரியம் சார்ந்த பல்வேறு உறவுகளையும், மகிழ்ந்திருக்கும்

தருணங்களையும் இழந்து வருகிறோம். ஆனால் இந்த நாட்டுப்புறத்தெய்வங்களின் உயிர்ப்பானது வருடத்திற்கு ஒருமுறை அல்லது நான்கு வருடங்களுக்கு ஒரு முறையாவது உறவுகளைத் தம் பிடியில் இணைத்து, விழாக்களைக் கொண்டாடிச் சடங்குகளை நிறைவேற்றி வருகிறது. இந்த நாட்டார் தெய்வங்களைக் காரணம் கொண்டு பல்வேறு சூழலில் பொருளாதாரத்திற்காக ஓடித் திரியும் மனிதன் கூட மழை வேண்டியும், விளைச்சல் பெருகவும், நோய்நொடி வராமல் இருக்கவும், பகை இருப்பின் சமரசம் முயற்சிக்கவும் ஒன்று கூடுகிறான். சாமி கும்பிடுவது என முடிவு செய்துவிட்டால் பல்லி சகுனம் பார்த்தலில் இருந்து ஊர் சாற்றுதல், காப்பு கட்டுதல், வரி போடுதல், பூச்சட்டி ஏந்துதல், மொட்டை அடித்தல், காவடி எடுத்தல், காணிக்கை செலுத்துதல், மிருகங்களை நேர்ந்து விடல், கிடா வெட்டுதல், கரகாட்டம், கணியன் ஆட்டம், கும்மி அடித்தல் போன்ற அனைத்தையும் நடத்துகின்றான். நாட்டுப்புறத் தெய்வ வழிபாடானது மக்களின் எண்ணங்களையும், நம்பிக்கைகளையும், வழிபாட்டு முறைமைகளையும் தொன்மை சமயத்தின் கூறுகளாக பிரதிபலித்து நிற்பதை காணமுடிகிறது. நாட்டார் தெய்வங்களுக்கு விழா எடுப்பதன் மூலம் உள்ளத்திற்கு மகிழ்வும், உறவுகளுக்குள் தொடர்பும் ஏற்படுத்திக் கொள்கின்றான் மனிதன். தமிழ் சமூகத்தின் ஒவ்வொரு இன மக்களைப் பற்றி புரிந்து கொள்ளவும் அவர்களது கலை இலக்கியப் பண்பாடுகளை அறிந்து கொள்ளவும் பிற துறைகளைக் காட்டிலும் நாட்டுப்புறவியல் துறை சிறப்பான தகவல்களைத் தரக்கூடியதாக உள்ளது என்பதையும் இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது .

**அடிக்குறிப்புகள்**

*1.சு. சக்திவேல் — நாட்டுப்புற இயல் ஆய்வு -ப.எ-15*

***2.*மேலது - ப.எ-16-17**

***3.*முனைவர் இரவி - நாட்டுப்புற வாழ்வியலும் பண்பாடும் ப.எ-53 தொகுதி-1**

***4.*இரா.மோகன், நாட்டுப்புறவியல், ப.21**

***5.*ந.மு. வேங்கடசாமி நாட்டார்(உ.ஆ) சிலப்பதிகாரம், ப.45**

***6.*மேலது, சிலப்பதிகாரம் ப.45**

***7.* மேலது, சிலப்பதிகாரம் ப.45**

***8.* சு. சக்திவேல் — நாட்டுப்புற இயல் ஆய்வு -ப.எ-223**

***9.*அமுதா-தகவலாளி-பெல்லம்பட்டி(வயது 48)**

**10. சரோஜினி - தகவலாளி-பெல்லம்பட்டி(வயது 62)**

11. **சு. சக்திவேல் — நாட்டுப்புற இயல் ஆய்வு -ப.எ-227**

**துணைநூல் பட்டியல்**


அரிஸ்டாட்டில். வி - தமிழரின் தொன்மை,
சான்லாக்ஸ் பிரஸ்,
மதுரை , முதல் பதிப்பு ,2020

அருணாசலம் - தமிழக வழிபாட்டு மரபுகள்,
சந்தியா பதிப்பகம்,
சென்னை, முதல் பதிப்பு,2014.

இரவிச்சந்திரன். சீ.மா - கொங்கு நாட்டுப்புறவியல் தொகுதி-1
தமிழ் துறை பாரதியார் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர், முதல் பதிப்பு, 2008.

குணசேகரன் கரு.அழ - நாட்டுப்புற மண்ணும் மக்களும்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்,
சென்னை, இரண்டாம் பதிப்பு, 2008.

சக்திவேல். சு - நாட்டுப்புறவியல் ஆய்வு,
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை, இருபத்தியொன்றாம்
பதிப்பு 2015.

வேங்கடசாமி நாட்டார்,ந.மு. - சிலப்பதிகாரம் மூலமும் உரையும்,
ராமையா பதிப்பகம்,
சென்னை,மூன்றாம் பதிப்பு,2008.

*Aristotle - Thamizlarin Thonmai*

*Sanlax Press, Madurai, First Edition, 2020*

*Arunachalam - Thamizlaga valibaattu marabugal*

*Sandhya Publishing House, Chennai, First Edition, 2014.*

*Ravichandran.C.M - Kongu Folklore Volume-1*

*Tamil Department Bharathiar University,*

*Coimbatore, First Edition, 2008.*

*Gunasekaran Karu.Azh — Nattuppura Mannum Makkalum,*

*New Century Book House (P) Ltd.,*

*Chennai, Second Edition, 2008.*

*Sakthivel. S - Nattuppuraviyal Ayivu,*

*Manivasagar Publishing House,*

*Chennai, Twenty-first edition 2015.*

*Venkatasamy Nattar N.M. - Silappadhikaram Moolamum Uraiyum,*

*Ramaiah Publishing House, Chennai, Third Edition, 2008.*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2025, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com